# தேசபக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:165 ★16.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:165 ★16.10.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai


# விஜய் இன்று கோவை பயணம்: பெரியார் அறிவுலகத்தை திறந்து வைக்கிறார்

தமிழக முதல்வர் விஜய் இன்று கோவை வந்து, பெரியார் அறிவுலகம் என்னும் நூலகத்தை திறந்து வைக்கிறார். கோவை காந்திபுரம் சிறைச்சாலை நிர்வாகத்திற்கு சொந்தமான இடத்தில் 6.98 ஏக்கர் பரப்பளவில் 7 மாடிகளில் 'பெரியார் அறிவுலகம்' என்ற பெயரில் பிரமாண்ட நூலகம், தகவல் தொழில்நுட்ப அரங்கம் அமைக்கும்பணி, கடந்ததிமுக ஆட்சியில் நடந்தது.

சுமார் 300 கோடி ரூபாய் செலவில் 1.98 லட்சம்சதுரஅடி பரப்பளவில்அசத்தலான தோற்றத்தில் பொதுப்பணித்துறை சார்பில் நூலகம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இதை திறப்பதற்காக முதல்வர் விஜய் சென்னையில் இருந்து இன்று காலை 11 மணிக்கு தனி விமானத்தில் கோவை



பீளமேடு விமான நிலையம் செல்கிறார்.

பின்னர், விமான நிலையம் முதல் காந்திபுரம் வரை சுமார் 12 கி.மீ தூரம் ரோடு ஷோவாக சென்று மக்களை சந்திக்கிறார்.

பின்னர், மதியம் 11.50 மணிக்கு பெரியார் அறிவுலகத்தையும், பெரியார் சிலையையும் திறந்து வைத்து பார்வையிடுகிறார். தொடர்ந்து, அங்கு நடக்கும் விழாவில், புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

★ திருச்சூர் கிருஷ்ணர் கோயிலில் தரிசனம்

கோவையில் நிகழ்ச்சியை முடித்துவிட்டு, முதல்வர் விஜய் காரில் அவினாசி ரோடு பி.ஆர்.எஸ். வளாகம் செல்கிறார். அங்கிருந்து ஹெலிகாப்டர் மூலம் கேரள மாநிலம் திருச்சூர் செல்கிறார். அங்கு, கிருஷ்ணர் கோயிலில் வழிபாடு நடத்திவிட்டு, அதே ஹெலிகாப்டர் மூலம் கோவை பீளமேடு விமான நிலையம் வருகிறார். இங்கிருந்து தனி விமானத்தில் மீண்டும் சென்னை திரும்புகிறார்.

# அரசு விழாவா? தவெக விழாவா? அதிகாரிகள் மீது பாய்ந்த அதிமுக எம்எல்ஏ

## நிகழ்ச்சியை புறக்கணித்து வெளியேறியதால் பரபரப்பு

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கான சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நாகப்பட்டினம் மாவட்டம்தலைஞாயிறு சமுதாயக்கூடத்தில் நேற்று நடந்தது. இந்நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக வேதாரண்யம் தொகுதி அதிமுக எம்எல்ஏ ஓ.எஸ்.மணியன், மாவட்ட கலெக்டர் மற்றும் அரசுத்துறை உயர் அலுவலர்களுக்கு முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் நேற்று காலை 10 மணியளவில் விழா தொடங்கியதும் தவெக நிர்வாகிகள் மேடையைஆக்கிரமித்துக் கொண்டனர். நாகப்பட்டினம்மாவட்ட செயலாளர் சுகுமாருக்கு பதிலாக அவருடைய மகன் ரொனால்டோ மற்றும் ஏராளமான தவெக நிர்வாகிகள் மேடை முழுவதும் அமர்ந்து கொண்டும், நின்று கொண்டும் இருந்தனர். விழாவில் பங்கேற்பதற்காக எம்எல்ஏ ஓ.எஸ். மணியன் பிற்பகல்



12.45க்கு வந்தார்.

அங்கு மேடையில் அரசு நெறிமுறைகள்மீறப்பட்டு தவெகவினர் மட்டுமே ஆக்கிரமித்து அமர்ந்து கொண்டிருப்பதை கண்டு கடும் அதிர்ச்சியும், ஆவேசமும் அடைந்தார். மாவட்ட கலெக்டர் மற்றும்அரசுஅலுவலர்கள் கலந்துகொள்வதாக கூறி என்னைஅழைத்துவிட்டு, மேடை முழுவதும் தவெகவினரை அமர வைத்து விழா நடத்துகிறார்களா?

இது அரசு விழாவா? அல்லது தவெக கட்சி விழாவா? நாளை அரசு விழாவில் தேசியக்கொடி ஏற்றுவதற்கு பதிலாக தவெக கொடியை ஏற்றுவீர்களா? என நிகழ்ச்சி ஏற்பாடு செய்திருந்த அரசு அலுவலர்களை சரமாரியாக கேள்வி எழுப்பினார்.

அப்போது அவரை சமாதானப்படுத்த முயன்ற அரசு அலுவல ர்களை கடிந்துகொண்ட ஓ.எஸ். மணியன், நிகழ்ச்சியை புறக்கணித்து 12.50க்கு அங்கிருந்து வெளிநடப்பு செய்தார்.

# மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால் கடைமடையில் கருகும் பயிர்கள்

## எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் காட்டம்

மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால் கடைமடையில் கருகும் பயிர்கள் என எதிர்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவு: மூடர் கூட்ட அரசின் விளம்பர வெறியால் கடைமடையில் கருகும் பயிர்கள். மேட்டூரில் இருந்து திறந்துவிடப்பட்ட தண்ணீர் டெல்டாவின் கடைமடை பகுதிகளுக்கு வந்து சேராமல் சம்பா பயிர்கள் காய்கின்ற நிலையில், தற்போது அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படுவது நிறுத்தப்படவுள்ளதால் பயிர்களை எப்படி காப்பாற்றுவது என்று புரியாமல் டெல்டா விவசாயிகள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஜூன் மாதம் தண்ணீர் திறக்கப்படாததால் ஏற்கனவே குறுவை சாகுபடி பொய்த்தது. இப்போது சம்பாவும் பாதிப்புக்குள்ளாகி இருக்கிறது.

மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக உள்ளதால், செப்டம்பர் 1ம் தேதி தண்ணீர் திறப்பதற்கு பதிலாக கொஞ்சம் தாமதமாக தண்ணீர் திறக்க வேண்டும் அப்போது தான் நெல்மணி முளைத்து வருகின்ற காலகட்டத்தில் தண்ணீர் பற்றாக்குறை இருக்காது என்று டெல்டா விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.



விவசாயிகளின் நடைமுறை சிக்கல் புரியாமல், ரீல் வெறி கொண்டு அவசரகதியில் இந்த 'டம்மி சிஎம்' தண்ணீர்திறந்துவிட்டார். இப்போது உரிய நேரத்தில் தண்ணீர் இல்லாமல் பயிர்கள் கருகுகின்றன.

எந்தஒருதிட்டமிடலும் இல்லாமல் விவசாயிகளின் பேச்சையும் கேட்காமல் தன்னிச்சையாக செயல்பட்டு குறுவை சம்பா இரண்டையும் இல்லாமல் செய்திருக்கிறது இந்த கோமாளி சர்க்கார்.

ஏற்கனவே அரிசி, பருப்பு விலை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது. நிர்வாக திறனற்ற இந்த ஆட்சியாளர்களால், உணவு உற்பத்தி மேலும் பாதித்து, விலைவாசி இன்னும் உயருகின்ற அபாயம்ஏற்பட்டுள்ளது. வேளாண்துறைக்கு செயலாளர் இல்லாததை நாம் சுட்டிக்காட்டிய பிறகு, வேளாண்செயலாளரைநியமித்த முதலமைச்சர், விவசாயிகள் பிரச்னையை தீர்ப்பதற்கான ஆலோசனை கூட்டம் நாம் சொன்ன பிறகுதான் நடத்துவாரா?

இப்பிரச்னை குறித்து உடனே ஆய்வுக்கூட்டங்களைநடத்தி, டெல்டாவை வறட்சி பாதித்த பகுதியாக அறிவிக்க வேண்டும். விவசாயிகளுக்கு அனைத்து நிவாரண உதவிகளையும்

இந்த ஆட்சியாளர்கள் உடனடியாக வழங்க வேண்டும்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.




திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மருத்துவம்மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் தேசிய நலக்குழுமத்தின் சார்பில் செவிலியர்களுக்கு ஒரு நாள் பயிற்சிக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா தலைமையில் நடைபெற்றது. திருவள்ளூர் மாவட்ட சுகாதார அலுவலர் மரு.பிரியாராஜ், அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை மகப்பேறு மருத்துவர் மரு.அன்னி மருத்துவர்கள், செவிலியர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# ஆதரவாளர்கள் 100 பேர் நீக்கப்பட்ட நிலையில் சி.வி.சண்முகம் ஆதரவு எம்எல்ஏ எடப்பாடியுடன் திடீர் சந்திப்பு

தமிழக சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு, மாஜி அமைச்சர்கள் வேலுமணி, சி.வி.சண்முகம் ஆகியோர் தலைமையிலான எம்எல்ஏக்கள், தவெகவுக்கு ஆதரவு தெரிவித்தனர். இதனால் அதிமுக மீண்டும் உடையும் நிலை ஏற்பட்டது. அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு எதிராக சி.வி.சண்முகம் கடுமையாக பேசி வந்த நிலையில், கடந்த ஜூலையில் அவரது ஆதரவாளர்கள் 11 நிர்வாகிகளின் கட்சி பதவி பறிக்கப்பட்டது.

தொடர்ந்து அவ்வப்போது சி.வி. சண்முகம் ஆதரவாளர்கள் பதவி



பறிக்கப்பட்டது. தற்போது, இடைத்தேர்தலில் அதிமுக தோல்வியைஅடுத்து, பொதுக்குழுவை கூட்ட சி.வி.சண்முகம் ஆதரவாளர்கள் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில், நேற்று திடீரென சி.வி.சண்முகத்தின் ஆதரவு 100 கிளை செயலாளர்களை அதிமுகவில் இருந்து நீக்கி எடப்பாடி பழனிசாமி உத்தரவிட்டுள்ளார்.

இந்த சூழலில் சி.வி.சண்முகம் நிருபர்களிடம் கூறுகையில், ''நான் அதிமுகவில் எந்த பதவியிலும் இல்லை. ஒருங்கிணைப்புக்கான நடவடிக்கையை எடுத்தால் அதற்கு நான் ஒத்துழைக்க தயார்'' என்று தெரிவித்திருந்தார். அதிமுக கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தியும், எடப்பாடியைசந்தித்துசி.வி.சண்முகம் பேச வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில், அதிமுகவில் இருந்து ஓரங்கட்டப்பட்ட சி.வி.சண்முகம் ஆதரவாளரான பண்ருட்டி தொகுதி அதிமுக எம்எல்ஏ மோகன், நேற்று சேலத்தில் உள்ள அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியை சந்தித்து பேசினார். அவருடன் ஆதரவாளர்களும் வந்திருந்தனர். பின்னர் மோகன் எம்எல்ஏ நிருபர்களிடம் கூறுகையில், ''பண்ருட்டி தொகுதியில் அதிமுகவில் இருந்து சிலர் சில கட்சிகளுக்கு போயிருக்கலாம்.

தற்போது அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இளைஞர்களை பார்த்து தேர்வு செய்து சார்பு அணி பதவியில் நியமனம் செய்துள்ளார். இதனால் அவரிடம் வாழ்த்து பெற வந்தோம். யாரும் என்னை அழைக்கவில்லை. நானும் எங்கும் போகவில்லை. எடப்பாடி பழனிசாமியின் கட்டளையைஏற்றுசெயல்படதயாராக இருக்கிறோம். விரைவில் நல்லது நடக்கும்'' என்றார்.

# மாலத்தீவு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த 25 மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை: ஒன்றிய அமைச்சருக்கு முதல்வர் விஜய் கடிதம்

மாலத்தீவு கடலோர காவல்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தூத்துக்குடி மாவட்டத்தை சேர்ந்த 25 தமிழக மீனவர்களையும், அவர்களின் 3 மீன்பிடி விசைப்படகுகளையும் மீட்க தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் விஜய் நேற்று கடிதம் எழுதியுள்ளார். இதுகுறித்து ஒன்றிய வெளியுறவு துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர்விஜய் நேற்று எழுதியுள்ள கடிதத்தில் கூறி இருப்பதாவது:

தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்த 25மீனவர்கள், அவர்கள்பயன்படுத்திய மூன்று மீன்பிடி விசைப்படகுகளுடன் மாலத்தீவு கடலோர காவல்படையினரால் கடந்த 13ம் தேதி அதிகாலையில் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த விவகாரத்தில் ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் தலையிட்டு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

மேலும், இந்தவிவகாரம்தொடர்பாக மாலத்தீவு அரசுடன் தூதரகத்தின் வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தி, கைது செய்யப்பட்ட மீனவர்களை விடுவிக்கவும், அவர்களது மீன்பிடி விசைப்படகுகளை உடனடியாக மீட்பதற்கும், மீனவர்கள் பாதுகாப்பாக தாயகம்திரும்புவதைஉறுதிசெய்யவும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் இந்த விவகாரத்தில் தலையிட்டு, தக்க நடவடிக்கை மேற்கொள்வதுடன், பாதிக்கப்பட்ட மீனவர்களின் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த மீனவ சமூகத்திற்கும் மிகுந்த நம்பிக்கையையும் ஆறுதலையும் அளிக்கும். இவ்வாறு முதல்வர் விஜய் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தேசபக்தி

16.10.2026 வெள்ளிக்கிழமை

# ஆற்காட்டில் ஏ.பி.ஜே.அப்துல் கலாம் அறக்கட்டளை சார்பில் மரக்கன்றுகள் வழங்கும் விழா

## ஆற்காடு M.L.A எஸ்.எம்.சுகுமார் பங்கேற்ப்பு

மேதகு முன்னாள் குடியரசுத் தலைவர் பாரத ரத்னா டாக்டர் ஏ.பி.ஜே அப்துல் கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு டாக்டர் ஏ.பி.ஜே அப்துல்




கலாம் அறக்கட்டளை சார்பில் மாணவர்களுக்கு 1000 மரக்கன்றுகள் வழங்கும் விழா 15.10.26 புதன் கிழமை ஆற்காடு வரதராஜுலு செட்டியார் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. அறக்கட்டளை நிர்வாகி திரு கோபிநாத் தலைமை தாங்கினார். பள்ளி தலைவர் திரு பக்தவச்சலம், பள்ளி மேலாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தார்கள் பள்ளித் தலைமை ஆசிரியர் லதாஅவர்கள்வரவேற்புரைவழங்கினார். சிறப்பு அழைப்பாளராக ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் திரு S.M.சுகுமார் MLA, கலந்துகொண்டு தேசியக்கொடியை ஏற்றி வைத்து மாணவர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி வாழ்த்துரை வழங்கினார். இந்த சிறப்பான நிகழ்வில் ஆற்காடு நகர கழக செயலாளர் ஜிம் M.சங்கர், சர்தார் பாஷா ராஜா ஆற்காடு சுந்தர் கவுன்சிலர் K. உதயகுமார், வட்டச் செயலாளர் V. முருகன், P.வினோத், J. சதீஷ் ஆர். செல்வராஜ், C.கண்ணன் உட்பட மாணவ மாணவிகள் பள்ளி ஆசிரிய பெருமக்கள் தன்னார்வலர்கள் கலந்து கொண்டனர்.

# தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே காமாட்சிபுரத்தில் எல் நினோ விழிப்புணர்வு நிகழ்ச்சி

தேனி மாவட்டம், சின்னமனூர் அருகே உள்ள காமாட்சிபுரம் கிராமத்தில் நடைபெற்ற உழவர் மேளாவில், சேது பாஸ்கரா வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள் சார்பாக விவசாயிகளுக்கு எல் நினோ குறித்த விவசாயிகளுக்கு தெளிவுபடுத்த ப்பட்டது.மேலும், செய்முறை விளக்க ப்படங்கள் மற்றும் புகைப்படங்கள் வாயிலாக எல் நினோவின் செயல்பாடு, அதன் காரணமாக ஏற்படும் காலநிலை மாற்றங்கள் மற்றும் பயிர் உற்பத்தியில்



சிறப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.கிராம ப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் (RAWE) கீழ் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், கல்லூரி மாணவர்கள் லோகேஸ்வரன், ராஜேஷ், விஷ்வா, கௌதமன், சேகுவாரா சமயன், அசோக்குமார் மற்றும் ஸ்ரீராம் ஆகியோர் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு எல் நினோ தொடர்பான பல்வேறு முக்கிய பல தகவல்களை விளக்கி கூறினர். இந்நிகழ்ச்சியில்தேனிமாவட்டஆட்சியர் திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, I.A.S. மற்றும் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. எல். ஏ. ஜெகநாத் மிஸ்ரா ஆகியோர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி யின் போது, எல் நினோ என்றால் என்ன, அதனால் மழைப்பொழிவு, வெப்பநிலை, நீர் இருப்பு மற்றும் வேளாண் உற்பத்தியில் எத்தகைய தாக்கங்கள் ஏற்படும் என்பது குறித்து ஏற்படும்பாதிப்புகள்குறித்துமாணவர்கள் எளிய முறையில் எடுத்துரைத்தனர். எல் நினோ காலத்தில் மழைப்பொழிவில் உண்டாகும் மாறுபாடுகளை எதிர்கொள்ள நீர் சேமிப்பு, சொட்டுநீர் பாசனம், தகுந்த பயிர் திட்டமிடல், வறட்சியை தாங்கி வளரும் பயிர் ரகங்களை தேர்வு செய்தல் மற்றும் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாத்தல் போன்ற காலநிலைக்கு ஏற்ற நவீன வேளாண் மேலாண்மை முறைகளின் முக்கியத்துவத்தையும் மாணவர்கள் சுட்டிக்காட்டினர்.விவசா யிகளுக்கு நவீன வேளாண் அறிவியல் நுட்பங்களை எளிய முறையில் கொண்டு சேர்ப்பதையும், காலநிலை மாற்றங்களை சமாளிக்கும் திறனை அவர்களிடம் மேம்படுத்துவதையும் முதன்மை நோக்கமாக கொண்டு இந்நிகழ்ச்சி சிறப்பாக நடத்தப்பட்டது.

# திருவண்ணாமலை மாவட்டத்தில் ரூ.39.99 கோடியில் 5.36 லட்சம் மரக்கன்றுகள் நடும் பணி தொடக்கம் - ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்



திருவண்ணாமலை மாவட்டத்தில் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் நோக்கில், 819 கிராம ஊராட்சிகளில் ரூ.39 கோடியே 99 லட்சத்து 77 ஆயிரம் மதிப்பில் 5,36,802 மரக்கன்றுகள் நடும் மாபெரும் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்பணியைமாவட்டஆட்சியர்வந்தனா கார்க் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சி. கெங்கம்பட்டு ஊராட்சியில் இன்று (அக். 15) தொடங்கி வைத்து மரக்கன்றுகளை நட்டார்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், வளர்ச்சியடைந்த பாரதம் – கிராமவேலைஉறுதிமற்றும்வாழ்வாதாரத் திட்டப் பயனாளிகள் மூலம் மாவட்டம் முழுவதும் மரக்கன்றுகள் நடும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் ஒரு பகுதியாக, 819 கிராம ஊராட்சிகளிலும் மொத்தம் 5,36,802 மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இத்திட்டத்தின் கீழ் மாமரம், பலா போன்ற பழமரக் கன்றுகளும், ஆலமரம், புங்கை, வேம்பு உள்ளிட்ட நிழல் தரும் மரக்கன்றுகளும் நடப்படுகின்றன. நடப்பட்ட மரக்கன்று களை முறையாகப் பராமரித்து வளர்ப்பதன் மூலம் கிராமப்புறங்களில் பசுமைப் பரப்பை அதிகரிக்கவும், சுற்றுச்சூழலைப் பாதுகா க்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மரங்கள் கார்பன் டை ஆக்சைடை உறிஞ்சி ஆக்சிஜனை வெளியிடுவதன் மூலம் காற்றைத் தூய்மைப்படுத்து கின்றன. மேலும், வெப்பத்தைக் குறைத்து நிழல் அளிப்பதுடன், மண் அரிப்பைத் தடுப்பதற்கும் நீர்வளத்தைப் பாதுகாப்பதற்கும் உதவுகின்றன. மழைப்பொழிவு மற்றும் காலநிலை சமநிலையைப் பேணுவதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. உணவு, மருந்து, கட்டுமானப் பொருட்களை வழங்குவ தோடு, பறவைகள்மற்றும்விலங்குகளின் வாழிடமாகவும் மரங்கள் திகழ்கின்றன.

எனவே, மாவட்டத்தின் கிராமப்புறங்க ளில் பசுமையை அதிகரித்து இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் வகையில் இம்மாபெரும் மரக்கன்றுகள் நடும் பணி தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி, மாவட்டம் முழுவதும் இப்பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூகாஞ்சனா, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் மா. சிவநாத், உதவித் திட்ட அலுவலர் இரா. பவானி, உதவி செயற்பொறியாளர் அ.த. தமிழ்ச்செ ல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர் பாலகிருஷ்ணன், செங்கம் வட்டாட்சியர் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




பழனிநகராட்சிநடுநிலைப்பள்ளியில்நடைபெற்ற 13ஆவது புத்தக திருவிழாவை முன்னிட்டு வாசிப்பு நிகழ்வில் பழனி வட்டார கல்வி அலுவலர் ஜெயராணி தலைமை வகித்து சிறப்பித்தார்கள்.உடன் பழனி நூலக அலுவலர்கள் முன்னாள் வட்டாரக்கல்வி அலுவலர் ரமேஷ்குமார் கலந்து கொண்டனர்.

# பழனியில் இடி, மின்னலுடன் ஒரு மணி நேரம் கொட்டிய கனமழை




திண்டுக்கல்மாவட்டம், பழனிமற்றும்சுற்றுவட்டாரப் பகுதிகளில் இன்று மாலை இடி, மின்னலுடன்சுமார் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது.

பழனி அடிவாரம், பேருந்து நிலையம், ரயில்வே பீடர் சாலை, காந்தி மார்க்கெட் உள்ளிட்ட பகுதிகளிலும், ஆயக்குடி, நெய்க்காரப்பட்டி, பாப்பம்பட்டி உள்ளிட்ட கிராமங்களிலும் மழை பெய்ததால் சாலைகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது.

கடந்த சில நாட்களாக நிலவிய கடும் வெப்பம் தணிந்து, குளிர்ச்சியானசூழல்நிலவுவதால்பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். இந்த மழை விவசாயப் பணிகளுக்கும் நிலத்தடி நீர் செறிவூட்டலுக்கும் உதவும் என விவசாயிகள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

வெயில் தணிந்து குளிர்ச்சி – மகிழ்ச்சியில் பழனி மக்கள்!



**திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் தாலுகா சித்தரேவு ஊராட்சியில் உள்ள நெல்லூர் கிராமத்தில் முத்தாலம்மன் கோவில் திருவிழா மிக விமரிசையாக நடைபெற்றது. ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.**

# கடைகளின் பூட்டை உடைத்து திருட்டில் ஈடுபட்ட ஒருவர் கைது; மூன்று சிறார்கள் கண்டறியப்பட்டனர்

11.10.2026ம் தேதி இரவு, M8 சாத்தாங்காடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட திருவொற்றியூர், பாலகிருஷ்ணா நகர் மெயின் ரோடு பகுதியில் உள்ள டீக்கடை மற்றும் மளிகைக் கடைகளின் பூட்டுகளை உடைத்து, ரூ.29,500/ பணம் மற்றும் கடையிலிருந்த பொருட்களைத் திருடி சென்றதுடன், அடகுக்கடை மற்றும் செல்போன் கடைகளின் பூட்டுகளை உடைக்க



முயற்சி செய்தும், செல்போன் கடையில் இருந்த CCTV கேமராக்களை உடைத்தும், ATM மையத்தின் கதவைச் சேதப்படுத்தியும் திருடர்கள் சென்றுள்ளனர்.

இதுகுறித்து M8 சாத்தாங்காடு காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, காவல் ஆணையாளர் டி.செந்தில்குமார் உத்தரவின் பேரில், காவல்இணைஆணையாளர்மருத்துவர்ஆர்.சிவக்குமார் மேற்பார்வையில், செங்குன்றம் காவல் துணை ஆணையாளர் மகேஸ்வரி அறிவுறுத்தலின் பேரில் M8 சாத்தாங்காடு குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர்சசிக்குமார் அவர்கள் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டு சம்பவத்தில் தொடர்புடைய எதிரிகளை கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வந்தது.

இந்நிலையில், அப்பகுதியில் இருந்த பல்வேறு CCTV கேமராக்களின் பதிவுகளை ஆய்வு செய்து அதன் அடிப்படையில், 15.10.2026ம் தேதி காவல் ஆய்வாளர் சசிக்குமார் தலைமையிலான போலீசார் மேற்படி சம்பவத்தில் ஈடுபட்ட மூன்று சிறார்களைப் கையகப்படுத்தியும், தண்டையார்பேட்டை, நேதாஜி நகரைச் சேர்ந்த லோகேஷ்வரன் (வ/19) என்பவரைக் கைது செய்தும் நடவடிக்கை மேற்கொண்டனர்.

# பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் ஆய்வு

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள், இராணிப்பேட்டையில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர்திருமதி.ந.ப்ரியாரவிச்சந்திரன். மேற்கொண்டு வரும் விரிவாக்க நடவடிக்கைகள் குறித்தும் அதிகாரிகள் விளக்கினர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் ஆலையின் உள்கட்டமைப்பு வசதிகளைப் பார்வை யிட்டார். குறிப்பாக. பொருட்கள் சேமிப்புப் பிரிவில் உள்ள சேமிப்பு வசதிகளை நேரில் ஆய்வு செய்து,



இ.ஆ.ப. அவர்கள் இன்று (15.10.2026) இராணிப்பேட்டையில் உள்ள பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) நிறுவனத்தின் கொதிகலன் துணை உபகரணங்கள் தயாரிக்கும் ஆலைக்கு (Boiler Auxiliaries PlantBAP) நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ந்து, BHEL நிறுவனத்தின் மூத்த நிர்வாகிகளுடனான கூட்டத்துடன் தொடங்கியது. இக்கூட்டத்தில், ஆலையின் மற்றும் அதன் கட்டமைப்பு வளர்ச்சி குறித்து மாவட்ட ஆட்சித் தலைவருக்கு விளக்கக் காட்சி அளிக்கப்பட்டது. மேலும், ஆலையின் செயல்பாட்டுத் திறன்கள் மற்றும் அதன் முக்கிய தயாரிப்புகள் குறித்த விவரங்களும் எடுத்துரைக்கப்பட்டன.

இராணிப்பேட்டை தொழில்துறை வளாகத்தில் உள்ள உள்ளூர் உதிரிபாகத் தொழில்களின் வளர்ச்சியை மேம்படு த்துவதில் BHEL நிறுவனம் ஆற்றும் முக்கியப் பங்கு குறித்து கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

மேலும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் விண்வெளி உற்பத்தித் துறை உள்ளிட்ட அதிக வளர்ச்சி வாய்ப்புள்ள துறைகளில் பொதுத்துறை நிறுவனம் கரைப்பான் (Solvent) பாதுகாப்பு நடைமுறைகள் முறையாகப் பின்பற்ற ப்படுகின்றனவாஎன்பதைச்சரிபார்த்தார்.

மேலும், சுற்றுச்சூழல் மற்றும் சமூக நலன் சார்ந்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, டாக்டர் அப்துல் கலாம் பூங்காவில் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் பங்கேற்றார். தொடர்ந்து, டாக்டர் ஏ. பி.ஜே. அப்துல் கலாம் மற்றும் தொலைநோக்குப் பார்வை கொண்ட தமிழ்க் கவிஞர் பாரதியார் ஆகியோரின் சிலைகளுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். இறுதியாக, அருகிலுள்ள பகுதிகளிலிருந்து பணிக்கு வரும் ஊழியர்கள். பயிற்சியாளர்கள் மற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்களின் போக்கு வரத்துத் தேவைகள் குறித்து BHEL நிறுவனத்தின்தொழிலாளர்முன்னேற்றச் சங்க உறுப்பினர்களுடன் மாவட்ட நிர்வாகத்தினர் கலந்துரையாடினர்.

இந்நிர்வாக ஆய்வின்போது மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. பன்னீர்செல்வம், வாலாஜா வட்டாட்சியர் திரு.பன்னீர்செல்வம் மற்றும் வருவாய்த் துறையின் மூத்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# தாண்டிக்குடியில் கொலை வழக்கில் கைது; 3 பேருக்கு ஆயுள் தண்டனை, தலா ரூ.40 ஆயிரம் அபராதம்



திண்டுக்கல் மாவட்டம் தாண்டிக்கு டியில் 2012ம் கொலை வழக்கில் கோவையை சேர்ந்த ஞானசேகரன்(55), உளுந்தூர்பேட்டையை சேர்ந்த சண்முகசுந்தரம்(59), திண்டிவனத்தை சேர்ந்த சுந்தரமூர்த்தி(61) ஆகிய 3 பேரை தாண்டிக்குடி போலீசார் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் இவ்வழக்கு பழனி கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றத்தில் விசாரணையில் இருந்து வந்த நிலையில் தாண்டிக்குடி காவல் நிலைய ஆய்வாளர் பாண்டியம்மாள் நீதிமன்ற காவலர்கள் சுந்தரபாண்டியன், திருக்குமரன் மற்றும் அரசு வழக்கறிஞர் ஆகியோரின் முயற்சியால் இன்று பழனி கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்ற நீதிபதி மலர்விழி அவர்கள், 3 பேருக்கும் ஆயுள் தண்டனையும், தலா 40,000 அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார்

# பாடியநல்லூர் ஸ்ரீ ஆலயத்தம்மன் நகர் குடியிருப்பு சங்க நிர்வாகிகள் கோரிக்கை



மாதவரம் சட்டமன்ற தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சிக்கு உட்பட்ட ஸ்ரீ ஆலயத்தம்மன் நகர் குடியிருப்போர் நலச்சங்கம் பகுதிக்கு தவெக பாடியநல்லூர் பேரூராட்சி செயலாளர் முத்துக்குமார் அந்தப் பகுதியில் வசிக்கும் மக்களைச்சந்தித்து குறைகளை கேட்டறிந்தார். அப்போது குடியிருப்போர் மக்கள் அப்பகுதியில் உள்ள குறைகளை கோரிக்கையாக வழங்கினர்.

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய் பிரபுவின்கவனத்திற்கு கொண்டு பின்னர் இப்பகுதியில் உள்ள குறைகளை சரி செய்து தருவதாக உறுதியளித்தார்.

இதில் சங்க நிர்வாகிகள் முத்து, முக்கேஷ், தலைவர் செந்தில்குமார், செயலாளர் ஆறுமுகம், பொருளாளர் எல்லப்பன், வழக்கறிஞர்கள் சக்தி, பாலமுரளி, பாலாஜி உள்ளிட்ட கிராமபொதுமக்கள் உடனிருந்தனர்.

# செய்யாறில் தொடர் இருசக்கர வாகன திருடன் கைது: 6 வாகனங்கள் பறிமுதல்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து இருசக்கர வாகனங்களைத் திருடி வந்த ராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த 58 வயதுடைய சந்திரனை போலீசார் கைது செய்து, அவரிடமிருந்து 6 இருசக்கர வாகனங்களைப் பறிமுதல் செய்தனர்.



செய்யாறுமற்றும்அதன்சுற்றுவட்டாரப் பகுதிகளில் தொடர்ந்து இருசக்கர வாகனங்கள்திருடு போவதாகப்புகார்கள் வந்தன.

இதையடுத்து, செய்யாறு போலீசார் தீவிரவாகனச்சோதனைமற்றும்ரோந்துப் பணியில் ஈடுபட்டனர்.

அப்போது, ஆற்காடு சாலையில் இருசக்கர வாகனத்தில் வந்த ஒருவரைப் பிடித்து போலீசார்விசாரணை நடத்தினர். அவர் முன்னுக்குப் பின் முரணாகப் பதிலளித்ததால், காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில்,அவர்ராணிப்பேட்டை மாவட்டம், சைனபுரம் கிராமத்தைச் சேர்ந்த சந்திரன் என்பதும், செய்யாறு மற்றும் பல்வேறு கிராமப்புறப் பகுதிகளில் இருசக்கர வாகனங்களைத் திருடி வந்ததும் தெரியவந்தது. இதையடுத்து, அவர் மறைத்து வைத்திருந்த 6 இருசக்கர வாகனங்களை போலீசார் பறிமுதல் செய்தனர்.

தொடர்ந்து, சந்திரன் மீது திருட்டு வழக்குப் பதிவு செய்து கைது செய்த போலீசார், அவரைசெய்யாறு குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். பின்னர், நீதிமன்ற உத்தரவின்படி வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

செய்யாறு பகுதியில் தொடர்ந்து இருசக்கர வாகனங்கள் திருடப்பட்டு வந்த நிலையில், சந்திரன் கைது செய்யப்பட்டு6வாகனங்கள்மீட்கப்பட்ட சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# பழனியில் போக்சோ வழக்கில் குற்றவாளிக்கு 24 ஆண்டுகள் சிறைத் தண்டனை; ரூ.10,000 அபராதம்

திண்டுக்கல் மாவட்டம், பழனி அருகே பாலசமுத்திரத்தில் 8 வயது சிறுமியைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்திய வழக்கில், வீரபத்திரன் என்ற விக்கி (27) என்பவருக்கு திண்டுக்கல் போக்சோ சிறப்பு நீதிமன்றம் 24 ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ரூ.10,000அபராதமும்விதித்து இன்று (அக். 15) தீர்ப்பளித்தது.



பழனி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட இவ்வழக்கில், காவல்துறையினர்சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி விசாரணையை விரைந்து முடிக்க நடவடிக்கை எடுத்தனர். தண்டனை விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, குற்றவாளி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# பாண்டிச்சேரி முதல்வருக்கு மகாலட்சுமி நர்சிங் கல்லூரி சேர்மன் பாலாஜி லோகநாதன் மரக்கன்றுகளை வழங்கினார்

பாண்டிச்சேரி முதல்வருக்கு மகாலட்சுமி நர்சிங் கல்லூரி சேர்மன் பாலாஜி லோகநாதன் மரக்கன்றுகளை வழங்கினார்.

ஸ்ரீ லட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளையின் கீழ் ஆற்காடு ஸ்ரீ மகாலட்சுமி மகளிர் நர்சிங் கல்லூரி, நர்சிங் பள்ளி, குளோபல் பள்ளி, நியூ மருத்துவமனை இயங்கிவருகிறது.

ஸ்ரீ லட்சுமி அம்மாள் கல்வி அறக்கட்டளை தலைவர் Rtn. PHF. ஸ்ரீ பாலாஜி லோகநாதன் அவர்கள் வாழ்க்கையில் வெற்றி அடைய கனவு காணுங்கள் என இளைய தலைமுறைக்கு எடுத்துகூறியடாக்டர்A.P.J.அப்துல்கலாம் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு பாண்டிச்சேரி முதல்வர் திரு. ரங்கசாமி அவர்களை மரியாதை நிமித்தமாக பாண்டிச்சேரியில் அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து அவர்களுக்கு தென்னை மரம் மற்றும் அப்துல் கலாம் ஐயா அவர்களின் புத்தகம் வழங்கினார்.



உடன் செங்காநத்தம், சித்தர்மலை, பைரவர் ஆலயம், வேலூர் ஸ்ரீ பகவதி சித்தர் திரு. சசிகுமார், ஆற்காடு D.L. சங்கர், ஆகியோர் கலந்து கொண்டனர்.

# திருக்கார்த்திகை தீப அன்னதானம் வழங்க நவ.10 வரை அனுமதி பெறலாம் - மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயில் திருக்கார்த்திகை தீபத் திருவிழா 2026ஐ முன்னிட்டு, அன்னதானம், நீர்மோர் மற்றும் பிற உணவுப்பொருட்களைவழங்கவிரும்பும் தனிநபர்கள், நிறுவனங்கள் ஆகியோர் அக்டோபர் 21 முதல் நவம்பர் 10ஆம் தேதி வரை விண்ணப்பித்து அனுமதி பெற வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது: அன்னதானம் வழங்க விரும்புவோர் www.foscos.gov.in என்ற இணையதளத்தில் ரூ.100 கட்டணம் செலுத்தி, உணவுப் பாதுகாப்புப் பதிவுச் சான்றிதழைப் பெற வேண்டும். பின்னர், திருவண்ணாமலை செங்கம் சாலையில் உள்ள பழைய அரசு மருத்துவமனை வளாகத்தில் செயல்படும் உணவுப் பாதுகாப்புத் துறை மாவட்ட நியமன அலுவலர் அலுவலகத்தில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தைச் சமர்ப்பித்து அனுமதி பெற வேண்டும்.



விண்ணப்பத்துடன் கடவுச்சீட்டு அளவிலான புகைப்படம், முகவரிக்கான அங்கீகரிக்கப்பட்ட சான்றின் நகல் ஆகியவற்றை இணைக்க வேண்டும். அன்னதானப் பணியில் ஈடுபடுவோரின் விவரங்களையும், அவர்களது ஆதார் அட்டை நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

மாவட்ட நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட இடங்களில், ஒதுக்கப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் மட்டுமே அன்னதானம் வழங்க வேண்டும். கிரிவலப் பாதையில் பக்தர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், பாதையிலிருந்து 100 மீட்டர் உட்புறத்தில் அன்னதானம் வழங்க வேண்டும். வாகனங்களில் உணவு வழங்கக் கூடாது.

அன்னதானம் மற்றும் நீர்மோர் உள்ளிட்ட உணவுப் பொருட்களை வாழை இலை, பாக்குமட்டை அல்லது தொன்னை ஆகியவற்றில் வழங்க வேண்டும். பொட்டலமிடப்பட்ட உணவுகள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்தக் கூடாது. உணவுப் பொருட்கள் தரமானதாகவும், தூய்மையானதாகவும், கலப்படமற்றதாகவும் இருக்க வேண்டும். செயற்கை நிறமிகளைப் பயன்படுத்தக் கூடாது. மூலப்பொருட்களை வாங்கும்போது தயாரிப்பு தேதி மற்றும் காலாவதி தேதியைச் சரிபார்க்க வேண்டும். தொற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களை உணவு தயாரிக்கவோ, பரிமாறவோ அனுமதிக்கக் கூடாது.

உணவுக் கழிவுகளைச் சேகரிக்கக் குப்பைத்தொட்டிகளை ஏற்பாடு செய்வதுடன், கழிவுகளை முறையாக அகற்றி, அன்னதானம் வழங்கிய இடத்தைச் சுத்தம் செய்துவிட்டுச் செல்ல வேண்டும்.

உணவுப் பாதுகாப்பு தொடர்பான புகார்களை 94440 42322 என்ற வாட்ஸ்அப் எண்ணில் தெரிவிக்கலாம். மேலும் விவரங்களுக்கு 04175237416, 9894385924 ஆகிய எண்களில் தொடர்புகொள்ளலாம். வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.



# 6 கிலோ கஞ்சா, கார், 3 பைக்குகள் பறிமுதல்; 4 இளைஞர்கள் கைது

## செய்யாறு மதுவிலக்கு போலீசார் அதிரடி

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு அருகே காரில் கடத்தி வரப்பட்ட 6 கிலோ கஞ்சாவைப் பறிமுதல் செய்த மதுவிலக்கு போலீசார், இதுதொடர்பாக 4 இளைஞர்களைக் கைது செய்தனர். மேலும், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட கார் மற்றும் 3 இருசக்கர வாகனங்களையும் பறிமுதல் செய்தனர்.

ஆந்திர மாநிலத்தில் இருந்து செய்யாறு வழியாக கஞ்சா கடத்தி வரப்படுவதாகச் செய்யாறு மதுவிலக்கு போலீசாருக்குரகசியத்தகவல்கிடைத்தது.இதையடுத்து, மதுவிலக்கு காவல் ஆய்வாளர் அமுதா, உதவி ஆய்வாளர் சரவணன் மற்றும் போலீசார் செய்யாறு–கொருக்கை சாலையில் வாகனத் தணிக்கையில் ஈடுபட்டனர்.

அப்போது, வெள்ளை கிராமத்தில் செய்யாறு ஆற்றுப் பகுதியைஒட்டியசவுக்குத்தோப்பில்சந்தேகத்திற்கிடமாக நின்றிருந்த காரை போலீசார் சோதனையிட்டனர். அதில் 6 கிலோ கஞ்சா பொட்டலங்கள் இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, கஞ்சாவுடன் காரையும் பறிமுதல் செய்த போலீசார், காரில் வந்த உத்திரமேரூர் வட்டம், பெருநகரைச் சேர்ந்த சிங்கார குமரன் (22) என்பவரைக் கைது செய்தனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், கஞ்சாவை மதுராந்தகம் பகுதியைச் சேர்ந்த சிலருக்கு விற்பனை செய்வதற்காகக் கொண்டு சென்றதாகத் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. இதன் அடிப்படையில், மதுராந்தகம் பகுதியைச் சேர்ந்த தமிழ் (20), சாமுவேல் என்ற முருகன் (22), மனோஜ் (19) ஆகியோரையும் போலீசார் கைது செய்தனர்.அவர்களிடமிருந்து3இருசக்கரவாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

இதுதொடர்பாக வழக்குப் பதிவு செய்த செய்யாறு மதுவிலக்கு போலீசார், கைது செய்யப்பட்ட 4 பேரையும் செய்யாறு குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். பின்னர் அவர்கள் சேலம் மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். இச்சம்பவம் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



திண்டுக்கல் ஜி.டி.என் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில், மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை2026 பள்ளி மாணவர் பிரிவுக்கான கபாடி போட்டியினை மாவட்ட ஆட்சித் தலைவர் துர்காமூர்த்தி ஐஏஎஸ், நிலக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அய்யனார் முன்னிலையில் தொடங்கி வைத்தார்



திண்டுக்கல் மாவட்டம் பழனி மலைக்கோயில் படிப்பாதையில் நேற்று கனமழை பெய்தது எட்டி படிப்பாதையில்ஆள்பறித்துஅறிவுபோல்பார்ப்பதற்கு கண்கொள்ள ா காட்சியாக காட்சி அளிக்கிறது முருகன் மலைக்குவந்தபக்தர்கள்மிகவும்மகிழ்ச்சிஅடைந்தனர் சுமார் இரண்டு மணி நேரம் கனமழை பெய்தது அதேபோல் பழனி சுற்றுவட்டார பகுதிகளும் நல்ல மழை பெய்தது

# இயற்கை வேளாண்மையில் மகளிரின் பங்களிப்பை அதிகரிக்க விழிப்புணர்வு

## வந்தவாசியில் மகளிர் விவசாயிகள் தின விழா

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டாரத்தில் மகளிர் விவசாயிகளின் வேளாண் பங்களிப்பை அங்கீகரிக்கும் வகையிலும், இயற்கை வேளாண்மை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலும் மகளிர் விவசாயிகள் தின விழா நடைபெற்றது.

வந்தவாசியில் உள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையத்தில் (IAEC) அக்டோபர் 15ஆம் தேதி நடைபெற்ற இவ்விழா, வேளாண்மை உதவி இயக்குநர் தே. குமரன் வழிகாட்டுதலின்படி, வந்தவாசி வேளாண்மை அலுவலர் சதீஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. விழாவில், வேளாண்மைத் துறையில் மகளிரின் பங்களிப்பு மற்றும் அவர்களின் உழைப்பை அங்கீகரிப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, விவசாய உற்பத்தியை அதிகரிப்பதிலும், உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் மகளிர் விவசாயிகள் ஆற்றிவரும் பங்கு விளக்கப்பட்டது.



மேலும், இயற்கை வேளாண்மையின் முக்கியத்துவம், இயற்கை உரங்களைப் பயன்படுத்துவதன் நன்மைகள், மண் வளத்தைப் பாதுகாக்கும் வழிமுறைகள் மற்றும்சுற்றுச்சூழலுக்குஉகந்தவேளாண் தொழில்நுட்பங்கள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மண்ணின் இயற்கை வளத்தைப் பாதுகாத்து, நீண்டகால வேளாண் வளர்ச்சியை உறுதி செய்யும் வகையில் இயற்கை வேளாண் முறைகளைப் பின்பற்ற வேண்டியதன் அவசியமும் வலியுறுத்தப்பட்டது. மகளிர் விவசாயிகளின்திறன்களைமேம்படுத்தி, வேளாண் துறையில் அவர்களின் பங்களிப்பை மேலும் அதிகரிப்பதற்கான விழிப்புணர்வையும் இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியது.

இந்நிகழ்ச்சியில் ஆத்மா திட்டப் பணியாளர்கள் மோ. சிந்தாமணி, ஆர். சல்மான், மோ. குறளரசு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நாயுடுமங்கலம் அருகே

# கார் மோதி அரசுப்பள்ளி ஆசிரியர் பலி

திருவண்ணாமலை மாவட்டம், நாயுடுமங்கலம் அருகே திருவண்ணாமலை–போளூர் தேசிய நெடுஞ்சாலையில்கார்மோதியவிபத்தில் அரசுப் பள்ளி ஆசிரியர் உயிரிழந்தார். பணியை முடித்துவிட்டு வீட்டிற்குச் சென்றபோது நிகழ்ந்த இந்தச் சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.





திருவண்ணாமலை மாவட்டம், துரிஞ்சாபுரம் ஒன்றியத்தை அடுத்த நாயுடுமங்கலம் ஊராட்சி மேட்டுத் தெருவைச் சேர்ந்த சின்ன பையன் மகன் ராஜேந்திரன் (48), அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்தார்.

இந்நிலையில், வழக்கம்போல் பணியை முடித்துவிட்டு, திருவண்ணாமலை–போளூர் தேசிய நெடுஞ்சாலை வழியாக நாயுடுமங்கலம் பகுதியில் உள்ள தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தார். அப்போது, அந்த வழியாக அதிவேகமாக வந்த கார், ராஜேந்திரன் மீது மோதியதாகக் கூறப்படுகிறது.

இந்தவிபத்தில்அவர்தூக்கிவீசப்பட்டு, தலையின் பின்பகுதியில் பலத்த காயமடைந்தார். இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். விபத்தைக் கண்ட அப்பகுதி மக்கள் அதிர்ச்சியடைந்தனர்.

இதுகுறித்துதகவல்அறிந்தகலசபாக்கம் போலீசார் சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணை நடத்தினர். பின்னர், ராஜேந்திரனின் உடலைக் கைப்பற்றி உடற்கூறாய்வுக்காகஅனுப்பிவைத்தனர்.

மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார், கார் ஓட்டுநர் மற்றும் விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். அரசுப் பள்ளி ஆசிரியர் சாலை விபத்தில் உயிரிழந்த சம்பவம் அவரது குடும்பத்தினர், உறவினர்கள் மற்றும் அப்பகுதி மக்களிடையே பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# சர்வதேச பெண் விவசாயிகள் தின விழா; மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் பங்கேற்பு

இராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா வட்டம், அனந்தலை ஊராட்சியில் உள்ள தன்வந்திரி கோயில் அருகே அமைந்துள்ள எஸ்.எம். மஹாலில், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் சர்வதேச பெண் விவசாயிகள் ஆண்டு 2026ஐ முன்னிட்டு பெண் விவசாயிகள் தின விழா நடைபெற்றது.



விழாவை மாவட்ட ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன் தொடங்கி வைத்து, 2026 27ஆம் ஆண்டு மின்னணு பயிர் கணக்கெடுப்புப் பணிகளைச் சிறப்பாக மேற்கொண்ட தன்னார்வலர்களுக்குப் பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார்.

அப்போது அவர் பேசுகையில், விவசாயத்தில் விதை விதைத்தல், நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல், கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகளில் பெண்கள் முக்கியப் பங்காற்றி வருகின்றனர். நாட்டின் உணவு உற்பத்தியை அதிகரிப்பதிலும், குடும்பத்தின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதிலும் பெண் விவசாயிகளின் பங்களிப்பு அளப்பரியது என்றார். மேலும், பெண் விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நிதியுதவி மற்றும் மானியத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. நில உரிமை, விவசாயக் கடன், நவீன தொழில்நுட்பம் மற்றும் சந்தை வாய்ப்புகளைப் பெறுவதில் அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களைக் களைய வேண்டும். அரசு நலத்திட்டங்கள், பயிற்சிகள் மற்றும் நிதியுதவிகள் பெண் விவசாயிகளைச் சென்றடைய அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் சுந்தரம், தோட்டக்கலைத்துறைதுணைஇயக்குநர் சிந்தியா, அட்மா திட்டத் துணை இயக்குநர் திலகவதி, வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் ரூபன்குமார், வேளாண்மை அலுவலர் சூரியமூர்த்தி வட்டாட்சியர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம் பழனி பழனி ஆண்டவர் பாலிடெக்னிக் கல்லூரியில் இருந்து பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் டெங்கு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது டாக்டர் வருண் குமார் தலைமை வகித்தார் இதில் சுகாதாரத் துறை அலுவலர்கள் மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டு பஸ் நிலையம் ரவுண்டானா வரை பேரணியாக சென்றனர் தொடர்ந்து தொடர்ந்து டெங்கு தடுப்பு விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்

# ஒரே நாளில் 1.50 லட்சம் பனை விதைகள் நடவு

## திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்

திருவண்ணாமலை மாவட்டத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பையும், பனை மரங்களின் வளர்ச்சியையும் ஊக்குவிக்கும் வகையில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் ஒரே நாளில் 1.50 லட்சம் பனை விதைகள் நடும் பணி மேற்கொள்ளப்பட்டது. இப்பணியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (அக். 15) தொடங்கி வைத்து பனை விதைகளை நட்டு வைத்தார்.



திருவண்ணாமலை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆடையூர் ஏரி மற்றும் புதுப்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சி. கெங்கம்பட்டு ஊராட்சி ஆகிய இடங்களில் பனை விதைகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்டம் முழுவதும் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களின் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து கிராம ஊராட்சிகளிலும் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழ்நாட்டின் மாநில மரமான பனை மரம், மக்களுக்கு பல்வேறு வகைகளில் பயனளிப்பதால் ‘கற்பக விருட்சம்’ என்று போற்றப்படுகிறது.

பனை மரத்திலிருந்து நுங்கு, பதநீர், கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனம்பழம், பனங்கிழங்கு உள்ளிட்ட உணவுப் பொருட்கள் கிடைக்கின்றன. பனையோலைகளைக் கொண்டு பாய்கள், விசிறிகள், தொப்பிகள் உள்ளிட்ட கைவினைப் பொருட்களும் தயாரிக்கப்படுகின்றன.

மேலும், பனை மரங்கள் மண்ணரிப்பைத் தடுப்பதிலும், சுற்றுச்சூழல் சமநிலையைப் பாதுகாப்பதிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பனை சார்ந்த தொழில்கள் கிராமப்புற மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் உதவுகின்றன. எனவே, பனை மரங்களைப் பாதுகாத்து அதிக அளவில் வளர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் இப்பெரும் நடவுப் பணி மேற்கொள்ளப்பட்டது.

மாவட்ட ஆட்சியரின் வழிகாட்டுதலின்படி, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களிலும் பணியாளர்கள் மூலம் பனை விதைகள் நடப்பட்டன.

முன்னதாக, ஆடையூர் ஏரியில் ‘சேவ் ஹியூமானிட்டி டிரஸ்ட்’ தொண்டு நிறுவனத்தின் சார்பில் நடைபெற்ற பனை விதைகள் நடும் பணியையும் மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் பூ. காஞ்சனா, ஊரக வளர்ச்சித் துறை செயற்பொறியாளர் மா. சிவநாத், திருவண்ணாமலை வருவாய்க் கோட்டாட்சியர் செல்வம், உதவித் திட்ட அலுவலர் இரா. பவானி, உதவி செயற்பொறியாளர் அ. த. தமிழ்ச்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர் பாலகிருஷ்ணன், சேவ்ஹியூமானிட்டிடிரஸ்ட் இயக்குநர் ஜி. அம்பிகா, தொண்டு நிறுவனத்தின் அலுவலர்கள், உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# புதுகையில் 13 மணிநேரம் மின்தடை; மக்கள், வர்த்தகர்கள் சாலை மறியல்

## 2 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி அடுத்த மணமேல்குடி, மீமிசல் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகள், 500க்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. இப்பகுதிகளில் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வந்தது. இதனால் வர்த்தகம் பாதிப்பதாக வர்த்தக நல சங்கத்தினர் மின்வாரிய அலுவலகத்தில் மனு அளித்தனர்.

இந்நிலையில் மணமேல்குடி மற்றும் மீமிசல் பகுதிகளில் மாதாந்திர பராமரிப்பு பணிகளுக்காக நேற்றுமுன்தினம் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின் வினியோகம் நிறுத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

திட்டமிட்டபடி மாலை 6 மணிக்கு மின்சாரம் வழங்கப்பட்டாலும் அடுத்த 1 மணி நேரத்துக்குள்ளாகவே மீண்டும் மின்தடை ஏற்பட்டது. இந்த திடீர் மின்வெட்டு இரவு 10 மணிக்கு மேலும் நீடித்ததால் ஒட்டு மொத்தமாக 13 மணி நேரத்துக்கும் மேலாக மக்கள் மின்தடையால் அவதிக்குள்ளாகினர்.

வர்த்தக சங்கத்தினர் மற்றும் பொதுமக்கள் மின்வாரியத்தை தொடர்பு கொண்டும் மின்சாரம் வரவில்லை. மின்வாரிய அதிகாரிகளின் அலட்சிய போக்கை கண்டித்து பொதுமக்கள், வர்த்தகர்கள் ஒன்று திரண்டு மணமேல்குடி கிழக்கு கடற்கரை சாலையில் இரவு 10.30 மணியளவில் சாலை மறியலில் ஈடுபட்டனர். சுமார் 2 மணி நேரம் நீடித்த இந்த சாலை மறியல் போராட்டத்தால் அப்பகுதியில் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.



தகவலறிந்து வந்த மின்வாரிய அதிகாரிகள் மற்றும் மணமேல்குடி போலீசார் பேச்சுவார்த்தை நடத்தினர். இரவு 11 மணிக்கு மின்சாரம் வந்ததால் அனைவரும் கலைந்து சென்றனர்.

★ அமைச்சர்கள் ஆய்வின்போது இருளில் மூழ்கிய தூத்துக்குடி ஜிஹெச்

தூத்துக்குடி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அமைச்சர்கள் அருண்ராஜ், மதன் ராஜா ஆகியோர் நேற்று இரவு 7.15 மணிக்கு ஆய்வு மேற்கொள்ள வந்தனர்.

அப்போது மின்தடை ஏற்பட்டு அரசு மருத்துவமனை இருளில் மூழ்கியது. டார்ச் லைட் மற்றும் செல்போன் டார்ச் லைட் வெளிச்சத்தில் அமைச்சர்கள் மருத்துவமனைக்குள் சென்றனர். தொடர்ந்து, ஜெனரேட்டர் இயக்கப்பட்ட நிலையில் இரவு 7.20 மணியளவில் மின்சாரம் வந்தது.

### கன்னட மண்ணின் உரிமைக்காகப் புதிய அத்தியாயம்:

# 25 ஆண்டுகாலப் போராட்ட அனுபவத்துடன் மேதிஹால் ராகவேந்திரா தொடங்கிய கர்நாடக ரச்சனா வேதிகை

## முனிராஜ் உள்ளிட்ட தலைவர்கள் முன்னிலையில் விழா - சுமார் ஆயிரம் பேர் பங்கேற்பு

கோலார் கன்னட மொழி, மண், நீர் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்காகக் கடந்த 25 ஆண்டுகளாகத் தொடர்ந்து போராடி வருவதாகக் கூறும் கன்னட இயக்கத்தின் இளம் தலைவர் மேதிஹால் ராகவேந்திரா, தனது போராட்டப் பணிகளை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் நோக்கில் கர்நாடக ரச்சனா வேதிகை என்ற புதிய அமைப்பைத் தொடங்கியுள்ளார். இந்த அமைப்பின் தொடக்க விழா முனிராஜ் மற்றும் பிற தலைவர்களின் முன்னிலையில் நடைபெற்றது. இதில் கன்னட மொழி ஆர்வலர்கள், பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள், ஆதரவாளர்கள் மற்றும் கன்னடப் போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்கள் எனச் சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கன்னட மொழியின் வளர்ச்சி, கன்னடர்களின் உரிமைகள், கர்நாடகத்தின் நிலம், நீர்வளம் மற்றும் பாரம்பரியக் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதை முக்கிய நோக்கங்களாகக் கொண்டு இந்த அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. வரும் நாட்களில் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்கள், தாலுகாக்கள் மற்றும் உள்ளூர் பகுதிகளில் அமைப்பை விரிவுபடுத்தி, கன்னடர்களின் உரிமைகளுக்கான குரலை வலுப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாக மேதிஹால் ராகவேந்திரா தெரிவித்துள்ளார்.

புதிய அமைப்பின் தொடக்கம் குறித்துப் பேசிய அவர், கடந்த 25 ஆண்டுகளாகக் கன்னட மொழி, மண், நீர் மற்றும் கலாச்சாரத்தைப் பாதுகாப்பதற்கான போராட்டங்களில் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாகவும், இந்தப் போராட்டங்களின்போது பலமுறை சிறைக்குச் சென்றதுடன் காவல்துறையினரின் தடியடிகளையும் எதிர்கொண்டதாகவும் தெரிவித்தார். இருப்பினும், கன்னட மொழியின் மீதுள்ள பற்றும் கர்நாடகத்தின் மீதுள்ள அர்ப்பணிப்பும் தங்களைப் போராட்டக் களத்திலிருந்து பின்வாங்கச் செய்யவில்லை என்றும், கன்னடர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளைமேலும்தீவிரப்படுத்துவதேதங்களது நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், சில கன்னட ஆதரவு அமைப்புகள் கன்னடர்களின் நலன்களைவிடத் தனிப்பட்ட மற்றும் அரசியல் நலன்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதாகத் தாம் கருதுவதாகக் கூறிய அவர், கன்னட மொழி மற்றும் கன்னடர்களின் உரிமைகளுக்காக முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் எந்தவொரு தனிப்பட்ட ஆதாயத்திற்காகவும் பயன்படுத்தப்படக் கூடாது என்றும் வலியுறுத்தினார். கர்நாடகத்தில் கன்னட மொழி, நிலம், நீர்வளம், கலாச்சாரம் மற்றும் கன்னடர்களின் உரிமைகள் தொடர்பாகப் பிரச்சினைகள் எழும்போது, அவற்றுக்குத் தீர்வு காண ஜனநாயக



வழியில் போராடுவோம் என்றும் அவர் தெரிவித்தார். கன்னட மொழியின் தனித்துவத்திற்கும் கன்னடர்களின் உரிமைகளுக்கும் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலைகளில், மக்களின் ஆதரவுடன் போராட்டங்களை முன்னெடுக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார்.

கர்நாடக ரச்சனா வேதிகையின் வளர்ச்சிக்காக மாநில, மாவட்ட மற்றும் தாலுகா அளவுகளில் புதிய நிர்வாகிகளை நியமித்து, அமைப்பின் செயல்பாடுகளை முறைப்படுத்தத் திட்டமிட்டுள்ளதாகவும் மேதிஹால் ராகவேந்திரா தெரிவித்தார். கன்னட மொழி, பாரம்பரியம் மற்றும் மாநிலத்தின் உரிமைகளைப் பாதுகாப்பதில் இளைஞர்கள் அதிக அளவில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் அழைப்பு விடுத்தார்.

முனிராஜ் மற்றும் பிற தலைவர்களின் முன்னிலையில் நடைபெற்ற இந்தத் தொடக்க விழாவில் சுமார் ஆயிரம் பேர் பங்கேற்றதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 25 ஆண்டுகாலப் போராட்ட அனுபவத்தின் அடிப்படையில் கர்நாடக ரச்சனா வேதிகையை மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தும் முயற்சியில் மேதிஹால் ராகவேந்திரா இறங்கியுள்ள நிலையில், இந்தப் புதிய அமைப்பின் எதிர்காலச் செயல்பாடுகள் கன்னட மொழி, கலாச்சாரம் மற்றும் கன்னடர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் எத்தகைய பங்களிப்பை வழங்கும் என்பது இனிவரும் காலங்களில் தெரியவரும்.

# காரனோடை லயன்ஸ் சங்கம் சார்பில் மாபெரும் இரத்ததான முகாம்

சென்னை காரனோடை லயன்ஸ் சங்கம், காரனோடை வட்டார நாடார் ஐக்கிய சங்கம், மெல்வின் ஜோன்ஸ் நினைவு இரத்த வங்கி இணைந்து மாபெரும் இரத்ததான முகாம் செங்குன்றம் அடுத்த கேபிகே திருமண மாளிகையில் லயன்ஸ் சங்கத் தலைவர் டாக்டர் வி. புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது.

காரனோடை லயன்ஸ் சங்க செயலாளர் எம். பிரபாகரன், பொருளாளர் ஆர். வெங்கடேசன் ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர்.

காரனோடை வட்டா ஐக்கிய சங்கத் தலைவர் ஜெ. பாலமுருகன், செயலாளர் எஸ்.ரவிக்குமார், துணைத்தலைவர் வி.அய்யாத்துரை, பொருளாளர் டி.பி. பாண்டியன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னாள் மாவட்ட ஆளுநர் பி.வி. ரவீந்திரன் இரத்ததான முகாமை துவக்கி வைத்தார். முன்னதாக மறைந்த முன்னாள் ஆளுநரும், கூட்டு மாவட்டத்தலைவருமான இளங்கோவன் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செய்யப்பட்டது.

இம்முகாமில் மண்டலத் தலைவர் பி.கருப்பசாமி, வட்டாரத் தலைவர் வி.எம். விநாயகம், மாவட்டத் தலைவர்கள் சி.என். ராஜு, எம்.கோபாலன், எஸ். ரவிக்குமார், சி.ரெஜிகுமார், எஸ்.சங்கர், எஸ்.அலெக்ஸ், பி.ரவிதாஸ், கே.ஜெயபாலன், மற்றும் பி.கே. ராதாகிருஷ்ணன், செந்தில்குமார், கே.சுரேஷ், எஸ்.





குமரேசன், ஜெ.சுரேஷ், ஜி.முரளி, மாரிமுத்து உள்ளிட்ட லயன்ஸ் சங்க நிர்வாகிகள் உறுப்பினர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

இம்முகாமில் 50க்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு இரத்ததானம் செய்தனர்.

# திருவண்ணாமலையில் மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து போட்டிகள் தொடக்கம் - 1,292 பேர் பங்கேற்பு; ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார்



திருவண்ணாமலை மாவட்ட விளையாட்டு மைதானத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை கைப்பந்து போட்டிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (அக். 15) தொடங்கி வைத்தார். இப்போட்டிகளில் தமிழ்நாட்டின் 38 மாவட்டங்களைச் சேர்ந்த வீரர், வீராங்கனைகள் மற்றும் அணிகளின் மேலாளர்கள் என மொத்தம் 1,292 பேர் பங்கேற்றுள்ளனர்.

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் நடைபெற்ற தொடக்க நிகழ்ச்சியில், போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். அபிஷேக் முன்னிலை வகித்தார்.

பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள், மாற்றுத்திறனாளிகள், பொதுமக்கள் மற்றும் அரசு ஊழியர்களின் விளையாட்டுத் திறனை ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு சார்பில் முதலமைச்சர் கோப்பை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. கடந்த மாதம் நடைபெற்ற மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகள் மாநில அளவிலான போட்டிகளில் பங்கேற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக, திருவண்ணாமலை மாவட்டத்தில் பள்ளி மாணவ, மாணவிகளுக்கான மாநில அளவிலான கைப்பந்து குழுப்போட்டிகள் தொடங்கப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளுக்குத் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் தங்குமிடம், உணவு மற்றும் பேருந்து வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிகளில் வெற்றிபெறும் அணிகளுக்கு முதல் பரிசாக ரூ.12 லட்சமும், இரண்டாம் பரிசாக ரூ.8 லட்சமும், மூன்றாம் பரிசாக ரூ.4 லட்சமும் வழங்கப்பட உள்ளது. இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை வருவாய்க் கோட்டாட்சியர் செல்வம், முதன்மைக் கல்வி அலுவலர் முனிராஜ், மண்டல முதுநிலை மேலாளர் (பொறுப்பு) சாந்தி, மாவட்ட விளையாட்டு அலுவலர் சண்முகப்பிரியா மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA